**தலைப்பு – 332 தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் 2023 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் செய்யப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் 2021 ஆம் வருடத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையின் 1.6.1.2.1(அ) பந்தி | திறைசேரி நிதிக்கூற்றுகளின் பிரகாரம், ரூபா 37,967,000 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்கள் திணைக்களத்திற்கு உடமையாக உள்ளதென காட்டப்பட்டிருந்தும், வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான ரூபா 12,900,000 பெறுமதியான 5 மோட்டார் வாகனங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் திணைக்கள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் உண்மைத் தன்மை பற்றி கணக்காய்வில் திருப்தியடைய முடியாமையால் ட நிலையான சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டில் சரியாகப் உள்ளடக்கப்பட வேண்டும். | 1.6.1(அ)(i) பந்தி |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்களில் நிதியலல்லா சொத்துக்கள் பற்றிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 74,767,000 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களில் வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான ரூபா 10,700,000 பெறுமதியான 04 மோட்டார் வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. . | வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான 04 மோட்டார் வாகனங்களின் உரிமையை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் பிரகாரம் 2022 நவம்பர் 22 ஆம் திகதி குறிப்பிட்ட ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. | பயன்படுத்தப்படுகின்ற வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் முறையாக கையகப்படுத்தப்பட்டு நிலையான சொத்துகள் பதிவேட்டில் உள்ளிடப்பட வேண்டும். |
| (ii) | நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியின் முலம் வாங்கப்பட்டு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 13,984,000 பெறுமதியான 64 மோட்டார் சைக்கிள்கள் 2019 ஆம் ஆண்டில், திணைக்களத்திற்கு பெறப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 23 வரை அந்த மோட்டார் சைக்கிள்களின் உரிமை திணைக்களத்திற்கு கையகப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தினால் தற்போது 53 மோட்டார் சைக்கிள்களின் பதிவுச் சான்றிதழ்கள் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றை கையகப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இந்த மோட்டார் சைக்கிள்களின் உரிமையை கையகப்படுத்தவும், நிலையான சொத்து பதிவேட்டில் அவற்றின் விவரங்களை உள்ளிடவும் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF) மூலம் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட நிதி மானியங்களுக்கான ரூபா 1,000,000 ஆன வருடாந்த ஒதுக்கீடு மற்றும் ரூபா 2,696,000 ஆன மேலதிக ஒதுக்கீடுகளில், ரூபா 1,375,552 அதாவது 37 சதவீதம் மட்டுமே அந்த ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. | 2022 இல் ரூபா 2,696,000 ஒதுக்கீடு யுன்செப் வேலைத் திட்டத்திற்காக பெறப்படடிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரையில் முடிக்கப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்ட திட்டங்களுக்கு ரூபா 375,552 செலுத்தப்பட்டது. | வெளிநாட்டு மானியங்களாகப் பெறப்படும் நிதியிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய தரப்பினருக்கு உரிய பலன்களை உடனடியாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் திறமையின்மை களைத் தடுப்பதற்கான அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழுள்ள விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் செய்ய வேண்டி இருந்தபோதிலும் அதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை பயன்தரும் வகையில் கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேணடிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலமாக செய்யப்பட்டு அதன் | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், நிறைவேற்று உத்தியோகத்தர்களின் கூட்டங்கள்,முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் முன்னேற்றம் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுகின்றது. | கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதிலளிக்கப்படுமென கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 2022 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். | கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | உள்ளக கணக்காய்வுச் தணிக்கைச் செயற்பாடுகள் முறையாகச் செயற்படுததப்படுவதற்கான பயனுள்ள அமைப்பொன்று இருப்பதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட வேண்டிய போதிலும அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின்படி, அந்தத் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. | இப்பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருந்த கணக்காளர் உள்ளுர் விடுமுறை பெற்று இருந்தமையினால், இதுவரையில் அதற்கான அதிகாரியொரவர் நியமிக்கப்படாததாலும், அமைச்சின் கணக்காய்வுப் பிரிவில் இந்த நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய அத்துடன் திணைக்களத்தின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு, உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கான வலுவான தேவை காணப்படுவதால் பொருத்தமான அதிகாரிகளைக் கொண்ட உள்ளக கணக்காய்வுப் பிரிவு உடனடியாக நிறுவப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை கிழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தாின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | | | |
| | ரூபா | | | |
| (அ) **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | |
| 751(1),752,763 | 220,169,400 | சமூக நீர் வழங்கல் திட்டங்களை நிர்மாணிப்பதற்காக சமூகம் சார்ந்த நிறுவனங்களுக்கு வாங்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட தண்ணீர் குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் மற்றும் நன்கொடையாகப் பெறப்பட்ட 2,543 மீட்டர் தண்ணீர் தொடர்பான தகவல்கள் பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அனைத்து பெறுவனவுகளையும் பொருட்கள் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன. | திணைக்களத்தினால் கொள்முதல் மற்றும் விநியோகிக்கப்படும் உபகரணங்கள் மற்றும் துணைக்கருவிகளுக்கு முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்தி, தற்போது களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் குறித்து கணக்கெடுப்பு நடாத்தி, அனைத்து உபகரணங்களின் பௌதீக இருப்பை உறுதிசெய்து, பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை 2006** | | | | |
| 4.1 மற்றும் 4.4 பந்தி | 68,097,893 | சாலை, வடிகால், கால்வாய் போன்ற | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட் | கொள்முதல் வழிகாட்டுதல்களின் |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தங்களை, உள்ளூர் ஏலதாரர்கள் நிறைவேற்றும் வகையில், தனித்தனி கோப்புகளாக பிரிக்கப்பட்டாலும், ஒரே நேரத்தில், பல கோப்புகளுக்கு ஏலம் கோர வேண்டிய போதிலும் , மெணிக்கடவர மற்றும் பல்லேகம கிராமங்களில் 800 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம். 10 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பல சந்தர்ப்பங்களில் 02 சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் 03 தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. | டுள்ள மொத்த ஒதுக்கீடும் ஒவ்வொரு வருடாந்தம் கிடைக்கின்ற ஒதுக்கீட்டு வரம்புக்கு உட்பட்டு ஒவ்வொரு கட்டத்திலும் திட்டம் செயற்படுததப்பட்டது. குறிப்பிட்ட சமூகம் சார்ந்த அமைப்புகளுக்கு தொழில்நுட்ப திறன் இல்லாத பொருட்களுக்கான கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி, போட்டி விலை முறைமையின் கீழ் விலைகளை அழைத்து ஒப்பந்ததாரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். | படி, திணைக்களத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மிகவும் பயனுள்ள முறையின்படி ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 சனவரி 05 மற்றும் 2021 செப்டம்பர் 29 ஆம் திகதிய முறையே 01/2012 மற்றும் 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் மூன்று பேர் கொண்ட குழுவொன்றின் மூலம் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு கட்டுமான ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணிக்கத்வார மற்றும் பல்லேகம கிராமங்களின் 800 | 2021 ஆம் ஆண்டு முதல், சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கும்போது, திணைக்களத்தில் பதிவு செய்து, சம்பந்தப்பட்ட திட்டத்தில் பயன்பெறும் நிறுவனங்களுக்கு மட்டுமே ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன. திட்டம் நிறைவடைந்த பிறகு, அதன் | சுற்றறிக்கை அறிவுறுத்தலின்படி சமூக அடிப்படையிலான அமைப்பக்களின் தகுதி உறுதிப்படுத்தப் பட்டு ஒப்பந்தங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டம் கையளிக்கப்பட்டபோது அத்தகைய மூவரடங்கிய குழுவின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்படாததுடன் திணைக்களத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களால் அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எட்டப்படாமல் திட்டம் தோல்வியடைந்து இருந்தது. | பராமரிப்பு மற்றும் செயல்பாடுகள் சம்பந்தப்பட்ட சமூக அமைபபுக்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன . ரூபா 5 மில்லியனுக்கும் குறைவான மதிப்புள்ள திட்டங்கள் அத்திட்டத்தால் பயனடையக்கூடிய சமூக அமைபபுக்களுக்கு வழங்கப்படுகின்றமையால் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள பெறப்பட்டு ஒப்பிடப்படுவதில்லை என்பதால் குழுவொன்றினால் வால் மதிப்பீடு செய்யப்படுவதில்லை. | வேண்டும். |
| (ஆ) | மொனராகலை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட 04 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில், நிர்மாண ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 84 வேலைகளில் எவ்வித நிர்மாணமும் மேற்கொள்ளப்படாத நிலையில், மொத்தம் ரூபா 2,195,071 மற்றும் பாதி முடிக்கப்பட்ட அல்லது அளவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு மாறாக செய்யப்பட்ட 17 நிர்மாணப் பணிகளுக்காக மொத்தம் ரூபா 777,347 ஆனது மாவட்ட பொறியாளர்களின் சான்றிதழ்களின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒரு திட்டத்திற்கு ரூபா 3,929,236 முற்பணமாக செலுத்தப்பட்டு அது தொடர்பான பணிகள் எதுவும் நடைபெறாமல் 2023 மார்ச் வரையில் மேற்கூறிய திட்டங்கள் அனைத்தும் பாதியில் கைவிடப்பட்டிருந்தன. அதன்படி, அதற்காக செலவிடப்பட்ட ரூபா 17,730,116 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | இத்திட்டங்கள் பாதியில் நிறுத்தப்படவில்லை என்பதுடன் , தற்போது அதற்கான செயல்திறன் உத்தரவாதங்கள் மற்றும் முற்பண உத்தரவாதங்கள் நீட்டிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பற்றுச்சீட்டுக்கள் செலுத்துவதில் உள்ள சிக்கல்களை மேலும் ஆராய்ந்து பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | இந்த ஒப்பந்த நடவடிக்கைகளை முறையாகக் கண்காணிக்காமல் கொடுப்பனவுகளை உறுதி செய்ததாலும், பணம் செலுத்தியதாலும் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள நபர்கள் மீது நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 பிரதேசங்களில் 4 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நீர்த் தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் பல வேலைகளின் செயற்திறனுக்கான சான்று அல்லது உறுதிப்படுத்தல் இன்றி ரூபா 295,000 மற்றும் நிறைவேற்றப்படாத பணிகளுக்கான மேலதிக கொடுப்பனவுகளுக்காக ரூபா | இந்த பற்றுச்சீட்டுக்களை செலுத்துவதற்கு முன்னர், தொடர்புடைய கட்டுமானங்களின் புகைப்படங்கள் சரிபாரக்கப்பட்டு பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், பிரச்சினை தொடர்பாக மேற்கொண்டு ஆராய்ந்து பின்னர் அறிக்கை | இந்த ஒப்பந்தப் பணியில் அதிகாரிகளின் அலட்சியத்தால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வில் தெரிய வந்துள்ளதால், இதற்கு |

| | | |
|---|---|---|
| 4,148,606 ஆன அரச பணம் வீணடிக்கப்பட்டிருந்தது. இத்திட்டங்களை ஆரம்பிக்கும் முன்னர், அந்தந்த இடங்களில் நீர் நிலை பரிசோதனை உள்ளிட்ட சாத்தியக்கூறு ஆய்வு நடாத்தப்படாததுடன் அமைக்கப்பட்ட 03 கிணறுகளிலும் தண்ணீர் எதிர்பார்த்த அளவை விட குறைவாகவும், பயன்பாட்டிற்கு தகுதியற்றதாகவும் தண்ணீர் மாதிரி பரிசோதனையின்போது உறுதி செய்யப்பட்டது. இதன்படி, இந்த நீர்வழங்கல் தொடர்பான அதிகாரிகள் மிகவும் அலட்சியமாக செயற்பட்டு அரசாங்கத்திற்கு நஷ்டங்களை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்படும். | காரணமான அதிகாரிகள் மீது நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த கட்டுமானப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கம் மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கான வரைவு சட்டமூலம் 2014 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டுள்ளபடி முறையான சட்டப் பின்னணியின்றி ஏறக்குறைய 4530 எண்ணிக்கையான சமூக அடிப்படையிலான அமைப்புகளைப் பதிவுசெய்து சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் மாதாந்த கட்டணம் வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. | திணைக்களம் தலையிட்டு அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி தற்போது சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு, அதற்கான அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டம் நிறைவேற்றப் படுதல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் நோக்கத்திற்காக 80 Nano Filters களை நிர்மாணித்து நிறுவுவதற்காக 2021 ஆம் ஆண்டில், திணைக்களத்தினால் ஒப்பந்தங்கள் வழஙகப்பட்டிருந்ததுடன் அவற்றில் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 31 வரை 25 மட்டுமே கட்டப்பட்டு முடிக்கப்பட்டிருந்ததுடன் அன்றைய திகதி வரை மொத்தம் ரூபா 120,718,050 செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட 05 Nano Filters தொடர்பான மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வகையில், பெறுகை வழிகாட்டுதல்களின் 8.14.1 இன் படி ஒப்பந்த காலத்தை நீடிக்காமல் கட்டுமானப்பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தும் அதற்கான தாமதக் கட்டணம் வசூலிப்பதற்கு மற்றும் செயல்திறன் உத்தரவாதங்களை பணமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை, கட்டுமானம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அளவுப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு முரணாக நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் போது தொழில்நுட்ப அதிகாரிகள் வழங்கிய பொய்யான சான்றிதழின் அடிப்படையில் மொத்தம் ரூபா 7,385,602 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன. | திணைக்களத்திற்கு கிடைத்த ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இதுவரை 80 Nano Filters களில் 50 இற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 30 இற்காக 2021 செப்டம்பர் 15 அன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் செயல்திறன் உத்தரவாதம் நீட்டிக்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. தாமதக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை என்பதுடன் கட்டுமானத்திற்காக ஒப்பந்ததாரர் பயன்படுத்திய திட்டம் மற்றும் ஏல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்குமிடையே உள்ள முரண்பாடுகள் காரணமாக இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன், தற்போது அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் கட்டுமானம் சரிசெய்யப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறைகளில் அதிகாரிகளின் அலட்சியம் மற்றும் அலட்சியத்தால் அரசுக்கு ஏற்படும் இழப்பு, எதிர்பார்த்த மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக கணக்காய்வின்போது கண்ட பிடிக்கப்பட்ட விடயங்கள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ள மையால் அது தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுமானங்கள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மொத்தம் ரூபா 183,600 செலவிடப்பட்டு மொனராகலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 4 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் | தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையினால் இந்தக் குழாய்க் கிணறுகளுக்காக வழங்கப்பட்ட மதிப்பீட்டின்படி நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இந்த முறையற்ற ஒப்பந்தப் பணியினால் ஏற்பட்ட நஷ்டம் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| சபையானது புவியியல் ஆய்வுகளை மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டு பணிகளை ஆரம்பித்திருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் வரை மொத்தம் ரூபா 1,260,058 செலவிடப்பட்டு அவற்றில் 2 கிணறுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன. அமைக்கப்பட்டுள்ள குழாய் கிணறுகள் மூலம் நீர் விநியோகம் செய்யும் பணிகள் திணைக்களத்தினால் செய்யப்படவில்லை. அதன்படி மேற்படி புவியியல் ஆராய்ச்சிக்கு செலவிடப்பட்ட ரூபா 183,600 உட்பட இப்பணிகளுக்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 1,443,658 ஆன மொத்தத் தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | ஆனால் நீர் கொள்ளளவு சோதனைகள் செய்யப்பட இருந்த நிலையில் கொடுக்கப்பட்ட மதிப்பீடுகள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதால், இந்த நீர் கொள்ளளவு சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது, புதிய மதிப்பீடுகள் வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வேண்டியதுடன் 04 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு பயன்களை எதிர்பார்க்கும் மக்களுக்கு சேவைகளை வழங்க வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெனிக்கடவர, பல்லேகம கிராமங்களில் உள்ள 800 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டத்தின் 14 பணிகளுக்காக மொத்தம் ரூபா 28,530,317 தனியார் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் Pump house மற்றும் Sand filter என்பவற்றின் நிர்மாணம் 2023 பெப்ரவரி வரையில் அமைக்கப்படவில்லை. இத்திட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு கணக்காய்வு திகதி வரையில் 03 வருடங்களுக்கு மேலாகிவிட்ட போதிலும், திட்டம் முடிக்கப்படாததால் செலவிடப்பட்ட ரூபா 28,530,317 ஆனது விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | கணக்காய்வு திகதி வரையில், திட்டத்திற்கான மொத்த செலவு ரூபா 27,130,316 ஆகும். இத்திட்டத்தை நிர்மாணிக்கும் போது மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதால், உரிய பரிந்துரைகள் கிடைக்கும் வரை அந்த இடங்கள் தொடர்பான கட்டுமான பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்தத் திட்டம் இன்னும் செயற்பாட்டு நிலையில் இருப்பதுடன் மேற்படி செலவுகளால் செய்யப்பட்ட கொள்வனவுகள் மற்றும் கட்டுமானங்கள் இந்தத் திட்டத்திற்கு இன்றியமையாதவை. | கணக்காய்வு அவதானிப்புக்களில் கூறப்பட்டுள்ளபடி, இந்த ஒப்பந்தப் பணிகளில் அலட்சியமாக இருந்து அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதற்கும், சேவையைப் பெற எதிர்பார்க்கும் மக்களுக்கு உடனடியாக சேவையை வழங்காததற்கும் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்பனை, மொரண்டுமுல்லை மற்றும் கொங்கொல்ல சமூக நீர் திட்டத்தின் கீழ் 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதி வழங்கப்பட்ட 02 ஒப்பந்தங்கள் தொடர்பாக மொத்தம் ரூபா 3,929,236 முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 25 வரையில் பல தடவைகளில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கான நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தும் கட்டுமானப் பணிகள் நிறைவடையவில்லை. | கணக்காய்வுத் திகதி வரையில் நீரேற்று நிலையங்களின் பணிகள் முடிவடைந்து, மொத்த திட்டங்களில் சுமார் 20 சதவீதம் முன்னேற்றம் அடைந்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள Covid-19 தொற்றுநோய் மற்றும் மூலப்பொருட்களின் அதிக விலை காரணமாக, ஒப்பந்ததாரர் தற்காலிகமாக வேலையை நிறுத்திவிட்டு, தற்போது தொடர்புடைய செயல்திறன் உத்தரவாதங்கள் மற்றும் முற்பண உத்தரவாதங்களை நீட்டிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளார். | இத்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு, பயன்களை எதிர்பார்க்கும் மக்களுக்கு பலனகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அநுராதபுரம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 53,537,675 ஆன 4 நீர் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் 2021 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சுமார் ஒரு வருடத்தில் அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்திருக்க வேண்டும். இதில் ஒரே ஒரு திட்டத்தில் நீரேற்று நிலையம் அமைக்கும் பணி மட்டும் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள பணிகள் ஓராண்டுக்கு மேலாகியும் முடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய Covid-19 தொற்று நிலைமை மற்றும் மூலப்பொருட்களின் அதிக விலை காரணமாக, ஒப்பந்ததாரர் தற்காலிகமாக பணியை நிறுத்தியுள்ளார், தற்போது அது தொடர்பான செயல்திறன் உத்தரவாதங்கள் மற்றும் முற்பண உத்தரவாதங்கள் நீட்டிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஒப்பந்தங்களில், இந்த ஒப்பந்ததாரர் மட்டுமே 3 விலைமனுக்களை சமர்ப்பித்துள்ளார். ஏனைய ஒப்பந்தங்களுக்காக, இந்த ஒப்பந்ததாரரை விட ரூபா 5 மில்லியனுக்கும் அதிகமான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் இந்த ஒப்பந்ததாரருக்கு 04 ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டுள்ளன. | ஒப்பந்தத்தை வழங்கும்போது ஒப்பந்ததாரரின் நிதி மற்றும் பௌதீக திறன் மற்றும் முன்னைய வேலைகள் தொடர்பாக சரியான மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தங்கள் செயல்பாட்டில் இருக்கும் போது அவற்றை தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 4,290,300 செலவிடப்பட்டு ஒரு வருட உத்தரவாதக் காலத்துடன் 945 நீர் விநியோகிப்பான்கள் வாங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் வரையில் அந்த தண்ணீர் விநியோகிப்பான்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. அதன்படி, உத்தரவாதத்துடனான விலைக்கு அந்த நீர் விநியோகிப்பான்கள் வாங்கப்பட்டிருந்தமை பலனளிக்காமல் போயிருந்தது. | வருடாந்த பெறுகை திட்டத்தின்படி இத்திட்டத்தின் சிவில் கட்டுமானப் பணிகளுக்கு இரண்டு முறை பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட செய்யப்பட்டிருந்தும் , நாட்டில் மூலப்பொருட்களின் விலை அதிகமாக இருப்பதால், ஒப்பந்தம் வழங்குவதற்கு தகுந்த விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. சிவில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் அதற்கான நீர் விநியோகிப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | தேவையை முறையாக கண்டறிந்து கொள்முதல் செய்து, அரசு பணத்தை திறம்பட பயன்படுத்த வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு என்பதை புரிந்து கொள்ளாத அதிகாரிகள் மீது தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில், 11 மாவட்டங்களில் உள்ள 151 சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு 161 தண்ணீர் குழாய்கள் 2 நிறுவனங்களிடமிருந்து ரூபா 192,705,000 இற்கு வாங்கப்பட்டன. குறித்த பெறுகை நடைமுறைகளின்போது பெறுகை வழிகாட்டுதல்கள் எண். 6.1.3, 6.1.4, 6.2.2, 6.3.6, 2.12 (அ), 7.10.1 (ஆ), 7.12.4 மற்றும் 5.4.10 (ஆ) ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மாறாக இப்பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டதுடன் கொள்வனவு செய்யப்பட்ட நீர் இறைக்கும் குழாய்களில், 18,440,600 பெறுமதியான 14 நீர் இறைக்கும் இயந்திரங்கள் 2023 ஜனவரி 25 ஆம் திகதி வரை வழங்கப்படாததுடன் 2 சமூகம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,966,000 ரூபா பெறுமதியான 02 நீர் குழாய்களுக்கு ரூபா 187,860 மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக, தொடர்புடைய ஏல ஆவணங்கள் e-mail மூலம் அனுப்பப்பட்டன. ஏல தொடக்கக் குழு அறிக்கைகள் முறையாக உள்ளன. ஏலதாரர்களுடன் தொடர்புடைய நிதி திறன் மற்றும் முந்தைய அனுபவம் (குழாய்கள் வழங்கல்) ஆகியவற்றின் ஆவணங்களை ஏலதாரர்கள் வழங்கியுள்ளனர், மேலும் இதுவரை அனைத்து குழாய்களும் வழங்கப்பட்டுள்ளன மற்றும் ஒப்பந்தங்கள் ஏலதாரர்களுடன் முறையாக கையொப்பமிடப்பட்டுள்ளன. எதிர்கால பெறுகை நடவடிக்கைகளில் பெறுகை மற்றும் தொழில்நுட்பக் குழு உறுப்பினர்களிடமிருந்து உறுதிமொழிகள் எடுக்கப்படும். | இந்த கொள்முதல் செயல்பாட்டில் பெறுகை வழிகாட்டுதல்களை பின்பற்றாததற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் இந்த பெறுகை குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மட்டக்களப்பு பிரதேசத்தில் 5 நீர் வழங்கல் திட்டங்களுக்கும் மொனராகலை பிரதேசத்தில் 04 நீர் வழங்கல் திட்டங்களுக்கும் பொறியியலாளர் மதிப்பீட்டை விட 24 சதவீதம் முதல் 29 சதவீதம் அதிக பெறுமதியில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அதிகரிப்பினால் ஒப்பந்தங்களின் மொத்தக்கிரய அதிகரிப்பு ரூபா 14,463,172 ஆகும். பெறுகை வழிகாட்டுதல்களின் பந்தி 4.3 இல் உள்ள அறிவுறுத்தல்களின்படி, பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரிப்பதன் மூலம் உத்தேசிக்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படவில்லை மற்றும் அதற்காக செலவிடப்பட்ட கிரயம் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை (Rates) பயன்படுத்தி இந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் , மேலும் 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தமை மற்றும் பொருட்களின் பற்றாக்குறை. காரணமாக இது ஏற்பட்டுள்ளது. | ஒப்பந்த மதிப்பீடு மற்றும் வழங்கலின் போது இதுபோன்ற முறைகேடுகளைத் தடுக்கவும், அரசுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்கவும் நிர்வாகத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பதுலுகம்மன, பிபில குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 12,209,816 இற்கு பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன், 07 பிரதான சிவில் வேலைகளின் கிரயத்திற்கும் ஒப்பந்ததாரரின் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடு 10 சதவீதத்திற்கும் அதிகமாக 06 வேலைகள் காணப்பட்துடன் அந்த பணிகள் ஒவ்வொன்றிலும் சேர்க்கப்பட்டுள்ள உருப்படிகள் தனித்தனியாகக் கருத்திற் கொள்ளப்பட்டபோது, அவ்வேறுபாடு 587 சதவீதம் வரையான உயர் அசாதாரண பெறுமதியை எடுத்துள்ளது. விலை மனுக்களை மதிப்பிடும் போது இந்த வேறுபாடு கருத்திற் கொள்ளப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில், நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் மூலப்பொருட்களின் அதிகரிப்பு மற்றும் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக, ஏலதாரர்கள் ஏல ஆவணங்களில் அதிக விலையை கொடுத்துள்ளனர். அதன்படி, ஒப்பந்தத்தை உருப்படிப்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக ஒப்பந்தத்தை வழங்குவதற்கு விலைகளின் மொத்தத் தொகை மட்டுமே பரிசீலிக்கப்பட்டது. | பொறியியல் மதிப்பீட்டை தற்போதைய பொருளாதார சூழலுக்கு ஏற்றவாறு திருத்தியிருக்க வேண்டும், அவ்வாறு செய்யாமல், வழக்கத்திற்கு மாறாக அதிக பெறுமதியில் ஒப்பந்தங்களை வழங்குவது முறையற்ற முறைமை என்பதை நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். |

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனராகலை ரணுகல்ல பிரதேசத்தில் 500 குடும்பங்களுக்கு நீர் வழங்கும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 1,665,984 மதிப்பீட்டில் நீர் தாங்கி நிர்மாணிக்க திட்டமிடப்பட்டு ரூபா 2,314,123 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு ரூபா 462,824 ஆன | இத்திட்டம் கைவிடப்படவில்லை என்பதுடன், ஒதுக்கங்கள் பெறப்படுகின்ற அடிப்படையில் திட்டம் 03 ஆரம்ப கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு | திட்டம் செயற்படுத்தப்படுவது முறையான ஆய்வு மற்றும் திட்டமிடலுடன் செய்யப்பட வேண்டும், அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் |

| | | |
|---|---|---|
| முற்பணம் செலுத்தப்பட்டது. தாங்கியின் நிர்மாணம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நிறுத்தி வைப்பதற்கு 2021 நவம்பர் 17 ஆம் திகதி முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்ட கட்டுமானப் பணிக்கு, அப்போது மொத்தம் ரூபா 6,147,244 செலவிடப்பட்டிருந்தும் இற்றைவரை உத்தேசித்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | வருகின்றது. அந்த கட்டங்கள் நிறைவடைந்த பிறகு நீர் விநியோகம் செய்யப்பட முடியுமென்பதுடன் அதன்படி, மூன்றாம் கட்டமாக குழாய்கள் பதித்து இந்த தாங்கியை முடிக்க திட்டமிடப்பட்டு, அதுதொடர்பான மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. | முறையான மேற்பார்வை இருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதால் அரசுக்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மாணிக்கடவரை நீர் திட்டத்திற்காக ரூபா 4,660,200 செலவில் வாங்கப்பட்ட இரண்டு தண்ணீர் குழாய்கள் உரிய திட்டத்தில் நிறுவப்படாமல் சமுதாய அடிப்படையிலான சங்கத்தின் செயலாளரின் வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. தண்ணீர் குழாய்களை நிறுவுவதற்கு அந்த செலவில் சேர்க்கப்பட்ட ரூபா 120,000 ஆன தொகை தண்ணீர் குழாய்கள் நிறுவப்படாமலேயே வழங்குநருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வில் காட்டப்பட்ட அவதானிப்புகள் உண்மையாக இருந்தாலும், கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக நீரேற்று நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் குழாய்களை நிறுவுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார் மற்றும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு மட்டுமே குழாய்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குடிநீர் திட்டங்களுக்காக வாங்கப்படும் உபகரணங்களை பாதுகாப்பாக வைத்திருக்கும் திட்டத்தை செயல்படுத்துவதுடன், செலவுகளை உறுதி செய்யாமல் பணம் செலுத்திய அதிகாரிகள் மீது உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மார்ச் 22 அன்று வழங்கப்பட்ட WAS/A/DNCWS/2022/AQ-04 ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினாவிற்கு கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 31 வரை பதிலளிக்கப்படவில்லை.. | கம்பஹா மாவட்டத்திலுள்ள அசுபினி சமூக நீர்த் திட்டம் தொடர்பில் விசாரணை நடைபெற்று வருவதால் ஐய வினாவிற்கு பதில் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பரிசோதனை நடவடிக்கைகள் முடிந்ததும் பதில் கணக்காய்வு பரிசோதனைக்கு சமரப்பிக்கப்படும். | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38 இன் விதிகளுக்கு நிர்வாகத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் குத்தகை வசதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 07 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை முறைப்படி மதிப்பிட்டு அவற்றை நிதிக்கூற்றுக்களில் உள்ளடககுவதற்குப் பதிலாக பெறுமதி ரூபா 36,800,000 என, இயந்திரவியல் பொறியியலாளர் குறிப்பிட்டிருந்ததாக பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட எழுத்துமூலமான உறுதிப்படுத்தலின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி இந்த 07 மோட்டார் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 36,800,000 என்பதாக முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பயன்படுத்தப்படுகின்ற வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் முறையாக கையேற்கப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020-2022 காலப்பகுதியில், திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 160 நீர் வழங்கல் திட்டங்களின் கிரயம் ரூபா 1,180,611,356 ஆன கட்டுமானப் பணிகள் 41 தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 29 வரை, அவற்றில் 04 ஒப்பந்தங்கள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான ஒப்பந்தப் பதிவேட்டை நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்காத காரணத்தினால் கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களின் ஒட்டுமொத்த நிலையை அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட்-19 தொற்றுநோய், கட்டுமானத் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மூலப்பொருட்களின் விலை உயர்வு, பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டிருந்ததடன், தற்போது இந்த ஒப்பந்தங்களில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், ஒப்பந்த பதிவேடு தற்போது முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. | திணைக்களத்தினால நிறைவேற்றப்பட்ட அனைத்து ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்களை உள்ளிடுவதன் மூலம் ஒப்பந்த பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 செப்டம்பர் 30 ஆம் திகதிய. 04/2016 (i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA இல் பதிவுசெய்யப்பட்ட C-7 தரத்தின் ஒப்பந்ததாருக்கு ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய ஒப்பந்தப் பணிகளின் நிதி வரம்பு ரூபா 5 முதல் 10 மில்லியன் வரை இருந்த போதிலும் மாதிரி கணக்காய்வில் | 2016.09.30 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு CIDA ஒப்பந்தக்காரருக்கு தொடர்புடைய நிதி வரம்பிற்குள் பல ஒப்பந்தங்களை ஒரே ஒப்பந்தக்காரருக்கு வழங்க முடியாது என்று | திணைக்களத்தினால செயற்படுத்தப்படுகின்ற சமூக நீர் வழங்கல் திட்டங்களுக்கு உரிய ஒப்பந்த நிர்வாகத்தில் காணப்படுகின்ற இக்குறைபாடுகள் திருத்தப்படுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த கிரயம் மொத்தம் ரூபா 24,736,088 ஆன 05 ஒப்பந்தப் பணிகள ஒரே காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை விட ரூபா 14,736,088 ஐ விஞ்சியதாக பூர்த்தி செய்வதற்காக தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கும், அநுராதபுரம் மாவட்டத்தில் மொத்தம் ரூபா் 59,274,662 ஆன 4 நீர் திட்டங்களின் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர் ஒருவருக்கும் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் பந்திகள் 3.2, 3.3, 3.4 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த சூழ்நிலையானது தொடர்புடைய ஒப்பந்தத்தை முடிப்பதில் அசாதாரண தாமதம் மற்றும் சரியான தரத்துடன் ஒப்பந்தங்கள் முடிக்கப்படாமை இந்த நிலைக்கு நேரடியாக பாதித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்படவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தத்தை பெற்ற ஒப்பந்ததாரர்கள் கூட காலதாமதம் செய்கின்றனர். எனவே, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக கட்டுமானத் துறையில் ஏற்பட்ட பின்னடைவு, மூலப்பொருட்களின் விலை உயர்வு, பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | |
| (ஈ) | திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு, மீளாய்வாண்டில் கணக்காய்வு மாதிரிக்கு உட்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பாக, முறையான பெறுகை முறையின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்காமை, மதிப்பிடப்பட்ட செலவை விட அதிக விலைக்கு ஒப்பந்தங்களை வழங்குவது, செய்யாத பணிகளுக்கு பணம் செலுத்துவது, ஒப்பந்தங்களை சரியாக கண்காணிக்காமை, முறையான பதிவுகளை பராமரிக்காமை, ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள பொதுவான குறைபாடுகள், ஒப்பந்தத்தை கைவிடுவது குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்காமை, செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்களை நிறைவேற்றுவது குறித்து பின்தொடரல் மேற்கொள்ளப்படாமை போன்ற பொதுவான குறைபாடுகள் குறித்து கணக்காய்வு அறிக்கைகள் மூலம் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தும் , அந்நிலைமையை சரிசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுக்கான தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு பொண்டு வரப்பட்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவ தற்கான எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கு முடியுமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) “பிரஜா ஜல் அபிமானி” வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகைக் செய்வதற்கு முன், பெறுகை நிறுவனத்தினால் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முடிந்துவிட்டன என்பதையும், திட்டத்தை சுமூகமாக செயல்படுத்தத் தேவையான மற்ற அனைத்து விடயங்களும் முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்த வேணடிய போதிலும், திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வு மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் 07 நீர் திட்டங்கள் தொடர்பான கட்டுமான இடங்கள் கையகப்படுத்தப்படவில்லை. | இதுவரை செயல்படுத்தப்பட்ட எந்த ஒரு சமுதாய குடிநீர் திட்டங்களிலும் நிலம் கையகப்படுத்தப்படல் செய்யப்படாமல் அந்த நிலங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமான நிலங்கள் அல்லது தனியாரிடம் இருந்து மானியமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்துவதில் கூடுதல் செலவை அரசே ஏற்க வேண்டும் என்பதால், நிலம் கையகப்படுத்தாமல் உரிய அனுமதி பெற்று திட்டம் செயற்படுத்தப்படும். | பதிலில் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து நிலங்களும் அரசுக்கு சொந்தமானது அல்லது தனியார் மானியமாக பெறப்பட்டிருந்தால், செலவில்லாமல் முறையாக கையகப்படுத்துவதற்கு தடையாக இல்லாதிருப்பதற்கு நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளக கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் பிரமாண இலக்கம் 128(அ,ஆ) மற்றும் 133 இன் பிரகாரம் பிரகாரம், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகள் மற்றும் பொறுப்பகளின் வெளிப்பாட்டில் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அமுலாக்குவதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப் பட்டிருந்ததுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் முறைப்படி நடைபெற வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒதுக்கப்பட்டிருந்த பொதிலும் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிப்பதற்கும் அந்த பதவிக்காக உயர் மட்டத்தில் திணைக்களத்தின் செயலாற்றல் மற்றும் வினைத்திறனை உயர்த்தும் நோக்கில் இதனை திறனுடன் | உள்ளக கணக்காய்வாளர் தரம் II/III பதவிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், உள்ளக கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்கு இலங்கை கணக்காளர் சேவையின் தரம் II/III அதிகாரியை நியமிப்பதற்கான கோரிக்கைகள் கடிதங்கள் மூலம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக கணக்காளர் 1 ஆம் தரத்தில் பதவியொன்றாக திருத்தியமைக்குமாறு அமைச்சின் செயலாளர் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2023.01.30 ஆம் திகதி கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பேணுவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட நிலையில் 36 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 15 பதவிகள் உட்பட அனைத்து வகைகளிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை சுமார் 23 சதவீதம் ஆகும். எவ்வாறாயினும், 72 ஊழியர்களின் மிகையும் அவதானிக்கப்பட்டதுடன் மற்றும் ஊழியர் நிர்வாகத்தின் மிகவும் பலவீனமான நிலை இதன் மூலம் அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. திணைக்களத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களுடன் 55 அலுவலர்கள் மிகையாக உள்ளனர். அந்த அதிகாரிகளை அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களில் சேர்த்துக் கொள்ளுமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வெற்றிடங்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திணைக்களத்தின் செயற்பாட்டிற்குத் தேவையான பணியாளர்களை பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |